ஒன்றும் செய்வதற்கில்லை. அதை அங்கே கொண்டுவரச் சொல்லுங்கள். உங்கள் கட்சி சார்பிலே பேசி கொண்டு வரச் சொல்லுங்கள். "Ratification- -க்கு வரட்டும் பார்த்துக் கொள்வோம்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ற அளவில் நான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறல்ல. நான் இங்கே சொல்கின்ற காரணத்தினால், அங்கு ஆளுங்கட்சியாக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியே அதைச் செய்யச் சொல்ல இந்த அரசு முன்வருமா? நான் அவை முன்னவர் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அவர் பதில் சொல்லத் தயாராக இருக்கும்போது . . .

3. விதி 111-ன்கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 111-ன் கீழ் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

*மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11—4—1987 அன்று காலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. தமிழரசன் அவர்கள் சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் நிர்வாகம் குறித்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் என்னிடம் கேட்டிருந்த ஒரு கேள்விக்கு ஓர் ஆண்டுக் காலமாக அத்துறைச் செயலரிடமிருந்து அமைச்சருக்குப் பதில் வராமல் இருக்கிறதென்றும், ஒரு முக்கியப் பிரச்சினை குறித்து எழுப்பப்பட்ட வினாவிற்கு ஓர் ஆண்டுக்காலமாக சம்பந்தப்பட்ட சமூக நலத்துறையிலிருந்து பதில் வராமல் இருப்பது உறுப்பினர்கள் உரிமையை மிகவும் பாதிக்கிறது என்றும் குறிப்பிட்டபொழுது, நான் அந்தக் கேள்வி ஆதிதிராவிடர் நலத் துறையும் வருவாய்த் துறையும் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். தற்போது சமூக நலத்துறைச் செயலரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்தபொழுது உறுப்பினர் குறிப்பிட்ட கேள்வி சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்தின் பொறுப்பில் உள்ளவர்களால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா என்பது பற்றியதாகும்; எனவே, இக் கேள்வி 1—7—1985 அன்று சமூக நலத்துறையால் பெறப்பட்டு அவ்வினாவில் குறிப்பிட்டுள்ள பொருள் சமூக நலத்துறையைச் சார்ந்ததாக இல்லாததாலும், வணிகவரி மற்றும் அறநிலையத்

துறைக்குச் சம்பந்தப்பட்டதாக இருந்ததாலும் மறுநாளே வணிக வரி மற்றும் அறநிலையத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. இவ்விவரம் சட்டப் பேரவைச் செயலகத்திற்கும் உடனே தெரிவிக்கப்பட்டுள்ளது. வணிகவரி மற்றும் அறநிலையத் துறையும் 25—10—1985 அன்று சம்பந்தப்பட்ட கேள்வி அத்துறையில் பரிசீலிக்கப்பட்டு வருவதாக சட்டப் பேரவை செயலகத்திற்குத் தெரிவித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அக்கேள்விக்கு மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் விடையளிக்கப் பட்டுள்ளது என்பதையும், சமூக நலத்துறையிடம் அல்ல என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1987-88 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

1. திரு. பொ. உத்திராபதி.
2. திரு. ஆ. நடராசன்.
3. திரு. பி.கே. எம். முத்துராமலிங்கம்.
4. திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
5. திரு. ஆர். எஸ். ஆறுமுகம்.
6. திரு. த. புஷ்பராசு.
7. திரு. ஜே. முகமது கனி
8. திருமதி இரா. சரோஜா.
9. திரு. மு. பாண்டுரங்கன்.
10. திரு. எச். ஜி. ஆறுமுகம்.
11. திரு. த. மாரிமுத்து.
12. திரு. மு. தங்கமணி.
13. திரு. வே. இரா. ஜெயராமன்.
14. திரு. எப். எம். இராசரத்தினம்.
15. திரு. கு. அ. செங்கோட்டையன்.
16. திரு. வி. சுப்பிரமணியன்.